7th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

எழுதும்போது பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிக்கிறார்கள். இதில் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அவர்கள் விருப்பம் போல் போட்டுக்கொள்கிறார்கள். ஆனால் இறந்து போன ஒருவரின் படத்தைப் போட்டு பிரசாரம் செய்வது உயர்ந்த பண்பல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மேலும், கல்வித்திட்டங்களை எல்லாம் போட்டுக்கொண்டே யிருக்கிறோம், ஆனால் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது என்பதுபற்றிச் சொன்னார்கள். டெக்னிகல் படிப்பு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது நம்முடைய திட்டத்தில் டெக்னிக்கல் 'பைஸ்' இருக்கிறது. ஜூனியர் டெக்னிக், பாலிடெக்னிக் போன்ற கல்வி முறைகள் இருக்கின்றன. அதோடு பள்ளிக்கூடத்தில் படிப்பதே உத்யோகம் பார்ப்பதற்குத்தான் என்ற மனப்பான்மை மாற வேண்டும். இதைப்பற்றி கனம் கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். சோஷியலிஸத்தில் அடிப்படையான கல்வி எல்லோருக்கும் இருக்கவேண்டும். அந்த முறையில் தான் நம்முடைய கல்வித் திட்டத்தை அமைத்துக்கொண்டு வருகிறோம்.

மேலும் பல விஷயங்களைப்பற்றி இங்கு குறிப்பிட்டுக்கொண்டே யிருக்கலாம், அவைகளைப்பற்றி எல்லாம் அரசாங்கம் பரிசீலித்து வேண்டிய கவனம் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

கனம் சபாநாயகர்: சபை இப்பொழுது ஒத்திவைக்கப்பட்டு நாளை காலை 8-30 மணிக்கு கூடும். 1-30 p.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

119. Notification issued with Roc. S.B.I. No. 65653/62, North Arcot Collector's Office, Vellore, dated 21st November 1963 regarding removal of Sri K. B. Subbaraya Udayar, President, Mambattu Panchayat in Polur taluk of North Arcot district. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

B. Reports, Notifications and other papers—*Nil.*